**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 527/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.1** |
| Name : | **திரு. செல்வராஜ்** |
| Father's Name/Husband Name: | **திரு. துரைசாமி** |
| Village : | அண்ணமங்கலம் |
| Taluk : | **வேப்பந்தட்டை** |
| Age : | 65/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 04.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அண்ணமங்கலம் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். 1ம் எதிரி சுசீந்தரன் எனது மகன் ரமேஸின் மைத்துனர் ஆவார். 1ம் எதிரியின் தந்தை 2ம் எதிரி ஆவார். 2ம் எதிரியின் மகள் சுஷ்மிதா ஆவார். 3ம் எதிரியின் தாயார் 4ம் எதிரி ஆவார். கடந்த 25.05.2025ம் தேதியன்று மாலை 5 மணியளவில் எனது மகனுக்கும் 3ம் எதிரியான சுஷ்மிதா என்பவருக்கும் அவர்களுக்குள் குடும்பத்திற்கு வாய் தகராறு ஏற்பட்டு அதனால் 3ம் எதிரி எங்கள் தெருவில் உள்ள அவருடைய பெற்றோர் வீட்டிற்கு கோவித்து கொண்டு சென்றுவிட்டார். நானும் என் மனைவி பவுணாம்பாள் நாங்கள் இருவரும் வீட்டில் உறங்கி கொண்டிருக்கும்போது இரவில் 11 மணியளவில் எதிரிகள் நால்வரும் ஒன்று கூடி வந்து வெளியே வாடா தேவடியாபயலே என்று கூறியும் கற்களால் வீட்டின் கதவில் அடித்து சத்தம் போட்டார்கள். என் மகன் தற்போது வீட்டில் இல்லை காலையில் எதுவாக இருந்தாலும் பேசிக்கொள்ளலாம் என்று சொன்ன போது

வெளியில் இருந்த சைக்கிளை மூங்கி கம்பால் 1ம் எதிரி அடித்தார். அப்போது 4ம் எதிரி 1ம் எதிரியிடம் அவனை போட்டு வாடா என்று சொன்னார். நானும் என் மனைவியும் வெளியே வந்த பின்னர் எதிரி சுசேந்திரன் என்பவர் என் தலையில் கல்லால் அடித்தார். 2ம் எதிரி மூங்கில் கழியால் என் தலையில் அடித்தார். என் மனைவி என்னை அடிப்பதைப் பார்த்து ஏண்டா அடிக்கிறீங்க என்று எதிரிகளைப் பார்த்து கேட்ட போது எதிரிகள் நால்வரும் சேர்ந்து என் மனைவியை வாசலில் போட்டு சேலையை உருவி போட்டு அடித்தார்கள். நான் அங்கிருந்து தப்பி ஓடும்போது 1ம் எதிரி என்னை துறத்தி வந்து மூங்கில் கழியால் என்னை இடது கை, முதுகு மற்றும் தலையில் அடித்தார். எதிரிகள் அனைவரும் என் மனைவியை அடித்தார்கள். நாங்கள் அடிப்பட்டதில் சீரியசாக அந்த இடத்தில் கிடந்தோம். என் மகனுக்கு போன் மூலம் தகவல் கொடுத்த பின்னர் அவர் 108 ஆம்புலன்சு மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்து சேர்ந்தோம். அங்கு சிகிச்சையிலிருந்த போது போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தும், வாக்குமூலமும் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். நான் கையெழுத்து போட்ட புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரியல்ல சொல்லமுடியும். நான் புகார் கொடுத்த மறுநாளே போலிசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றால் இல்லை அவர்கள் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்யவில்லை என்பதால் எஸ்பி ஆபிசிற்கு சென்று புகார் கொடுத்தும் அதன்பிறகு தான் 17 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். மருத்துவர் விசாரிக்கும்போது 5–6 நபர்கள் அடித்ததாக சொல்லியிருந்தேன் என்றால் சரியல்ல 5 நபர்கள் அடித்ததாக சொன்னேன். மூங்கில் குச்சியால் தான் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் கல்லாலும் மூங்கில் கழியாலும் அடித்ததாக சொல்லியுள்ளேன். புகாரிலும் மூங்கில் கழியால் தான் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் பயன்படுத்திய மூங்கில் கழியோ,

குச்சியோ, கல்லையோ போலிசார் கைப்பற்றினார்களா என்றால் ஆமாம். இரத்தம் படிந்த எனது மனைவியின் சேலை மற்றும் எனது ஆடைகளை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. சம்பவம் நடக்கும்போது அங்கு எத்தனை நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் எங்கள் வீதியில் 10–15 நபர்கள் இருந்திருப்பார்கள். 10–15 நபர்கள் சம்பவம் நடத்தில் இருந்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடக்கும் போது 4ம் எதிரியான எனது மருமகள் 4 மாதம் கர்ப்பமாக இருந்தார் என்றால் சரிதான். எனது சம்மந்தியான 2ம் எதிரி வெங்கடேஷ் சரியாக வாய்பேச முடியாதவர் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் ஆபாசமாக பேசியதால் மற்றவர்களுக்கு தொந்தரவு தரும் வகையிலோ அறுவருக்கத்தக்க வகையில் இருந்ததாக எனது புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மருத்துவர் என்னை விசாரிக்கும்போது குச்சியாலும் கல்லாலும் தான் அடித்தார்கள் என்று மட்டும் தான் சொல்லியுள்ளேன் வேறு எதுவும் சொல்லவில்லை என்றாலும் சரிதான். மருத்துவர் விசாரணையில் கொடுவாளால் தாக்கியதாக எதுவும் சொல்லவில்லை என்றால் சொன்னேன். எதிரிகள் கொடுவாளை காண்பித்து கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். கத்தி மற்றும் கொடுவாளுக்கு எனக்கு வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். அவை இரண்டும் வெவ்வேறு என்றால் சரிதான். 4ம் எதிரியான எனது மருமகள் கர்ப்பமாக இருக்கும்போது அவரை அடிக்கும்போது நானே கூட்டத்தில் விழுந்துவிட்டேன் என்றாலும் நான் கட்டையில் எனது மருமகளை அடித்துவிட்டு பொய்யாக அவர்களின் மேல் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 4ம் எதிரிக்கு கருக்கலைவு ஏற்படும் நிலைக்கு சென்றுவிட்டு சிகிச்சை பெற்று தான் குழந்தை பிறந்தது என்றால் சரியல்ல. நாங்களே எதிரிகளை அடித்துவிட்டு அதில் இருந்து தப்பிப்பதற்காக இவ்வழக்கில் பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கு அடிப்பட்டதற்கான சிடி ஸ்கேன், எம்ஆர்ஐ மற்றும் எக்ஸ்ரே எல்லாம் எடுத்தார்களா என்றால் அரசு மருத்துவமனையில் அனைத்துமே பரிசோதனை செய்து எடுத்தார்கள். அந்த ரிப்போர்ட்டை போலிசாரிடம் என்னிடம் பெற்றார்களா என்றால் என்னிடம் எதுவும் பெறவில்லை.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.